விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆடி - 24 திங்கள் 09.08.2021 மலர் - 2, இதழ் - 125

# அபாய கட்டத்தில் பாடநூல் நிறுவனம்


விஜயபாரதம்

தமிழக பாடநூல் நிறுவனத்தில் பெண்களை கொச்சையாக விமர்சிக்கும் ஐ. லியோனியை நியமிக்கத்த போதே, வருங்காலத்தில் பாடதிட்டங்களில் தி.மு.க தலைமையிலான தமிழக அரசு மேற்கொள்ளவிருக்கும் அபாயகரமான மாற்றங்கள், இருட்டடிப்புகள், உட்சேர்ப்புகள் குறித்து மக்களுக்கு மெல்ல புரிய ஆரம்பித்தது. இதனையடுத்து, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தில் மாவோயிஸ்ட் அனுதாபியான கிறிஸ்தவ பாதிரி ராஜ் மரியசூசையை நியமித்து அடுத்த சர்ச்சையை ஏற்படுத்தியது தமிழக அரசு.

தற்போது அந்த வரிசையில், பெண்கள் தொடர்பான 'மீ டூ' சர்ச்சையில் சிக்கியவரும், பிரதமர் மோடி, முன்னாள் முதல்வர்கள் எம்.ஜி.ஆர், ஜெ.ஜெயலலிதா ஆகியோரை தரக்குறைவாக விமர்சிப்பவருமான வருமான வரித் துறை அதிகாரி சரவணனை தமிழ்நாடு பாடநூல் நிறுவன அலுவல் சாரா கல்வி குழு உறுப்பினராக நியமித்துள்ளது தி.மு.க அரசு. பல கல்வியாளர்கள் அமர்ந்து, பாடதிட்டங்களை வகுக்க அரசுக்கு ஆலோசனை அளித்த உயர்ந்த இடங்களில் இது போன்றவர்களின் நியமனம் ஆபத்தானது. அவர்களை தமிழக அரசு உடனடியாக பதவி நீக்கம் செய்ய வேண்டு. அவ்விடங்களில் பண்பு உயர்ந்த தேசப்பற்று உடைய சிறந்த கல்வியாளர்களை நியமித்து மாணவர்களின் கல்வியின் தரத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு.

'அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா மானம் உடைய தரசு' என்ற திருக்குறளை தமிழக அரசு நினைவில் கொள்வது நல்லது.

# பசுமை ரயில்கள்


விஜயபாரதம்

பாரீஸ் தட்பவெப்ப நிலை ஒப்பந்தம் 2015ன்படி, பசுமை வாயு வெளியீட்டை குறைக்க தேசிய ஹைட்ரஜன் தொலைநோக்கு திட்டம், மேம்பட்ட வேதியியல் மின்கல பயன்பாடு ஆகியவற்றை முன்னெடுக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இந்திய ரயில்வே நிர்வாகமும் வரும் 2030க்குள் பசுமை ரயில் போக்குவரத்திற்கு மாற திட்டமிட்டுள்ளது. அதன் ஒரு பகுதியாக, இந்தியன் ரயில்வே, ஹைட்ரஜன் வாயுவை பயன்படுத்தி ரயில்களை இயக்க ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளது. முதல் முறையாக ஹரியானா மாநிலத்தில் 'டெமு'வகை ரயிலில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.



விஜயபாரதம்

## திதி கொடுக்கும் போராட்டம்

கொரோனாவை காரணம்காட்டி, ஹிந்துக்கள் வழக்கமாக ஆடி அமாவாசை காலத்தில் முன்னோர்களுக்கு கடற்கரை, குளக்கரைகளில் திதி கொடுப்பதற்கான அனுமதியை தி.மு.க தலைமையிலான தமிழக அரசு மறுத்துவிட்டது. அதேசமயம், ஞாயிற்றுக்கிழமைகளில் கிறிஸ்தவ தேவாலயங்கள், மசூதிகள் செயல்படுவதை மட்டும் கண்டும் காணாமல் விட்டுள்ளது. அவ்வகையில் திருச்செந்தூரிலும் ஆடி அமாவாசை முன்னிட்டு கடற்கரையில் முன்னோர்களுக்கான திதி கொடுக்க அனுமதி மறுக்கப்பட்டது. இதனையடுத்து கோட்டாட்சியர் அலுவலகத்தில் திதி கொடுக்க இந்து முன்னணி மாநில துணைத்தலைவர் வி.பி.ஜெயக்குமார் தலைமையில் போராட்டம் அறிவிக்கப்பட்டது. ஆனால், வழக்கம்போல, அங்கும் அனுமதி மறுக்கப்பட்டது. இதனால், அருகாமையில் உள்ள குளக்கரையில் திதி கொடுக்கப்பட்டது. நாட்டு விடுதலைக்காக போராடியவர்கள், உயிர்த்தியாகம் செய்தவர்கள், போரில் உயிரிழந்த ராணுவ வீரர்கள், பயங்கரவாதத்தால் உயிரிழந்தவர்கள், பணியில் உயிரிழந்த காவல்துறையினர் உள்ளிட்ட அனைவரையும் நினைவு கூர்ந்து திதி கொடுக்கப்பட்டது.

## கலப்பு தடுப்பூசி சிறப்பு




விஜயபாரதம்

கொரோனா தொற்றுக்கு எதிராக ஒரேவகை தடுப் பூசிகள் 2 டோஸ்கள் செலுத்தப்படுகின்றன. இரு வேறு வகை தடுப்பூசிகளை கலந்து செலுத்துவது குறித்த ஆராய்ச்சிகள் உலகெங்கும் நடைபெற்று வருகின்றன. அவ்வகையில், நமது பாரதத்தில் தயாரிக்கப்பட்ட கோவாக்சின், கோவிஷீல்டு என்ற இரண்டு தடுப்பூசிகளை கலந்து செலுத்துவது குறித்த ஆராய்ச்சியை ஐ.சி.எம்.ஆர் மேற்கொண்டது. அதில் கிடைத்த முடிவுகள் தொடர்பாக ஐ.சி.எம்., வெளியிட்ட அறிக்கையில், 'கோவிஷீல்டு, கோவேக்சின் தடுப்பூசியை கலந்து அளிப்பது தொடர்பான ஆய்வுகளில் நல்ல முடிவுகள் கிடைத்துள்ளது. அப்படி போடுவது பாதுகாப்பானது மட்டும் அல்லாமல், சிறந்து நோய் எதிர்ப்பு சக்தியையும் அளிக்கிறது' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாகிஸ்தானியர்கள் பெற்ற குடியுரிமை



விஜயபாரதம்

குஜராத் அகமதாபாத்தின் குபர்நகர் பகுதியில் வசித்து வந்த மகேஷ் பார்பியானி, சுரேஷ் பர்பியானி மற்றும் ஹரேஷ் பர்பியானி. என்ற 3 பாகிஸ்தானியர்கள் போலி ஆவணங்களை சமர்ப்பித்து பாரதக் குடியுரிமை பெற்றனர். நரோடா தொகுதியில் வாக்காளர் பட்டியலில் தங்கள் பெயர்களையும் பதிவு செய்துள்ளனர். இது குறித்து தேர்தல் ஆணையத்துக்கு வந்த புகாரையடுத்து விசாரிக்கப்பட்டதில் இவர்கள் பாகிஸ்தான் நாட்டை சேர்ந்தவர்கள் என்பது உறுதி செய்யப்பட்டது. இதனையடுத்து, மேகனி நகர் காவல் நிலையத்தில் புகார் பதிவு செய்யப்பட்டுள்ளது.


# நடிகர் வீட்டுக்கு ரேஷன்



விஜயபாரதம்

சினிமா நடிகரும், இயக்குநருமான மணியன் பிள்ளை ராஜுவின் வீட்டுக்குக் கடந்த 3ம் தேதி சென்ற கேரள உணவுத்துறை அமைச்சர் ஜி.ஆர்.அனில், அவருக்கு ஓணம் பண்டிகைக்கு அரசு வழங்கும் தொகுப்பை வழங்கியிருக்கிறார். இந்த புகைப்படம் தற்போது இணையங்களில் வெளியாகியது. இதனையடுத்து, நான்பிரியாரிட்டி (NPHH) வகை ரேஷன் கார்டு வைத்துள்ளார் அந்த நடிகர். அவர்களுக்கு ரேஷன் கடையில் இப்போது இத்தொகுப்பு வழங்கப்படவில்லை. இவ்வகை கார்டுதாரர்களுக்கு வரும் 13ம் தேதி முதல் வழங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், அமைச்சர் அதனை முன்னதாகவே வீடு தேடி சென்று வழங்கியுள்ளார். இதுபோல அனைவரின் வீட்டிற்கும் அமைச்சர் நேரில் சென்று வழங்குவாரா என இணையதளவாசிகள் கேட்டு வருகின்றனர்.

# தாய்மதம் திரும்புவோம்



விஜயபாரதம்

உத்தரபிரதேசத்தின் ஷாம்லி மாவட்டல் உள்ள ஒரு குடும்பத்தை சேர்ந்த ஆறு நபர்கள் முஸ்லிம் மத்தை விட்டு தாய்மதமான ஹிந்து மதத்திற்குத் திரும்பினர். எங்கள் சுய விருப்பத்தின்பேரிலேயே தாய்மதம் திரும்புகிறோம் என பிரமாணப் பத்திரத்தையும் அவர்கள் தாக்கல் செய்தனர். எனது 6 பேர் கொண்ட குடும்பம் 12 ஆண்டுகளுக்குப் பிறகு இஸ்லாத்தில் இருந்து ஹிந்து மதத்திற்கு திரும்பியது. நான் சிறுவனாக இருந்தபோது என் தந்தை முஸ்லிமாக மாறினார். எங்கள் தவறைத் திருத்திக்கொண்டோம். தற்போது மகிழ்ச்சியாக இருக்கிறோம் என்று ரஷீத்தாக இருந்து ஹிந்துவாக மாறிய விகாஷ் தெரிவித்தார்.

# கோவிட் காப்பீட்டால் நஷ்டம்

கொரோனாவுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட கொரோனா கவாச், கொரோனா ரக்ஷக் ஆகிய இரண்டு குறுகியகால காப்பீட்டுத் திட்டங்கள் கொரோனாவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நல்ல பலன் அளித்தது. ஆனால், ஒவ்வொரு நோயாளியும் குறைந்தபட்சம் ஐந்து நாள்களாவது மருத்துவமனையில் இருந்தனர். இதன் காரணமாகப் பெரும்பாலான காப்பீட்டு நிறுவனங்கள் அதிகமான தொகையை மருத்துவமனைகளுக்கு செட்டில் செய்ய வேண்டியிருந்தது. இதனால் இத்திட்டங்கள் தங்களுக்கு மிகப்பெரிய இழப்பை ஏற்படுத்தி உள்ளன. 3ம் அலை வரப்போவதாக கூறப்படும் சூழலில், இருதரப்பினரின் பிரச்சனைகளை ஆராய்ந்து தகுந்த நடவடிக்கையை ஐ.ஆர்.டி.ஏ.ஐ எடுக்க வேண்டும் என்று காப்பீட்டு நிறுவனங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.



விஜயபாரதம்

# பாரதத்தின் ஹாக்கி தொட்டில்

டோக்கியோ ஒலிம்பிக்கில் 40 ஆண்டுகள் கழித்து பாரதம் வெண்கலப் பதக்கம் வென்றது. இது மக்களுக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் அளித்துள்ளது. கிரிக்கெட் மோகத்தில், நமது தேசிய விளையாட்டான ஹாக்கியை மறந்த நமக்கு இது ஒரு மறுமலர்ச்சி எனலாம். ஆனால், இதற்கு வித்திட்டது ஒடிசா மாநில அரசு என்பது பலருக்கும் தெரியாது. ஒடிசாவின் சுந்தர்கர் பகுதி இதுவரை 5 கேப்டன்களை, 60 க்கும் மேற்பட்ட சர்வதேச ஹாக்கி வீரர்களையும் உருவாக்கியுள்ளது.

2018ல் சஹாரா குழுமம் 'ஹாக்கி இந்தியா'வுடனான தனது ஸ்பான்சர்ஷிப் ஒப்பந்தத்தை நிறுத்திக்கொண்டது. இதனையடுத்து ஒடிசா அரசு, ஸ்பான்சர்ஷிப்பிற்கு பொறுப்பேற்றது. இதற்காக ரூ. 150 கோடியை ஒதுக்கியது. தேசிய விளையாட்டு போட்டிகளுக்கு ஸ்பான்சர் செய்ய ஒரு மாநில அரசே முன்வந்தது இதுவே முதல் முறை.

2017ல் ஹாக்கி இந்தியா லீக்கில் வென்ற கலிங்கா லான்சர்ஸ் கிளப்பிற்கு நிதியுதவி, 2018ல் ஹாக்கி உலக லீக் போட்டிகள், 2019ல் FIH ஹாக்கி ஆண்கள் இறுதிப் போட்டிகள், ஒலிம்பிக் ஹாக்கி தகுதிப் போட்டிகள், 2020ல் FIH ப்ரோ லீக் ஆகிய போட்டிகளை நடத்தியது ஒடிசா அரசு. ஹாக்கியில் உலகத்தர விளையாட்டு வீரர்களை உருவாக்க, டாடா குழுமத்துடன் இணைந்து கலிங்கா ஸ்டேடியத்தில் ஒடிசா நேவல் டாடா ஹாக்கி உயர் செயல்திறன் மையத்தை (HPC) அமைத்துள்ளது.


தற்போது, பழங்குடித் தலைவர் பிர்சா முண்டாவின் பெயரில், சுந்தர்கரில் நாட்டின் மிகப்பெரிய ஹாக்கி ஸ்டேடியம் அமைக்கப்பட்டு வருகிறது. ஒடிசா மாவட்டம் முழுவதும் 17 இடங்களில் செயற்கை ஹாக்கி விளையாட்டு மைதானங்கள் அமைக்கப்படுகின்றன.

1860களில் பழங்குடியினப் பகுதிக்கு வந்த ஐரோப்பிய மிஷனரிகளால் சுந்தர்கரில் ஹாக்கி அறிமுகப்படுத்தப்பட்டது. இதனால், பல நூற்றாண்டுகளாக, தெற்கு ஜார்க்கண்ட், ஒடிசாவின் சுந்தர்கர், சத்தீஸ்கரின் ஜாஷிபூர் ஆகியவற்றை உள்ளடக்கிய சோட்டனக்பூர் பீடபூமியில் ஹாக்கி விளையாட்டு பழங்குடியினரின் வாழ்வின் ஒரு அங்கமாகிவிட்டது. அங்கு கையில் ஹாக்கி மட்டையை பிடிக்காத குழந்தைகளே இல்லை எனலாம். இதனால், ஒடிசாவின் சுந்தர்கர் பகுதி 'பாரதத்தின் ஹாக்கி தொட்டில்' என அழைக்கப்படுகிறது.

விஜயபாரதம்



# நாளந்தா குறித்து கே கே முகமது





விஜயபாரதம்

அயோத்தியில் சர்ச்சைக்குரிய கட்டடம் கட்டப்படுவதற்கு முன் அங்கு ராமர் கோயில் இருந்ததை அறிவித்த புகழ்பெற்ற தொல்பொருள் ஆராய்ச்சியாளர் கே.கே முகமது, சமீபத்தில் கலந்துகொண்ட ஒரு இணையவழி நிகழ்ச்சியில், 'நாளந்தா பல்கலைக் கழகம், ஸ்ட்ராஸ்பர்க், ஆக்ஸ்போர்டு மற்றும் கேம்பிரிட்ஜ் போன்ற நவீன பல்கலைக்கழகங்களை விட இது மிகப் பெரியது மற்றும் மிகவும் பழமையானது. அங்கு மாணவர்கள் இந்திய துணைக் கண்டத்தில் இருந்து மட்டுமல்ல, ஜப்பான், சீனா, இந்தோனேசியா, மலேசியா போல பல நாடுகளிலிருந்து வந்தார்கள். ஹுவான் சுவாங் நாலந்தா பல்கலைக்கழகத்தில் இரண்டு ஆண்டுகள் படித்தார். அவர் அங்கு ஆசிரியரும் ஆனார். சுமந்திராவின் அரசர் நாளந்தாவின் நூலகத்திற்காக மட்டும் நான்கு கிராமங்களை நன்கொடையாக வழங்கினார். இந்தோனேசியா மன்னர் ஒருவரால் பல்கலைக்கழக வளாகத்திற்குள் ஒரு மடம் கட்டப்பட்டது. குப்தப் பேரரசின் பொற்காலம் எனப்படும் 5, 6 ஆம் நூற்றாண்டுகளில் நாளந்தா வளர்ந்தது. இந்த பல்கலைக்கழகம் பக்தியார் கால்ஜியால் 1193ல் கொள்ளையடிக்கப்பட்டு அழிக்கப்பட்டது. மூன்று முறை அழிக்கப்பட்டது ஆனால் இரண்டு முறை மட்டுமே மீண்டும் கட்டப்பட்டது. நாளந்தா பல்கலைக்கழகம் அழிக்கப்பட்டதால், பல நூற்றாண்டுகளில் திரட்டப்பட்ட அறிவையும் ஞானத்தையும் நாம் இழந்துவிட்டோம். இந்த பல்கலைக்கழகம் செயல்பட அனுமதித்திருந்தால் பாரதம் சாதித்திருக்கும் அறிவியல் முன்னேற்றத்தை யாராலும் கணிக்க முடியாது. எனவே நீங்கள் நாளந்தாவின் மண்ணில் நடக்கும்போது, அந்த மண்ணில் பல ஞானிகளும் மேதைகளும் வாழ்ந்ததை நினைவில் கொள்ள வேண்டும்' என கூறினார்.

# சேவைத்துளி

திருச்சி மாவட்டம், சாதனா அறக்கட்டளை, மற்றும் சேவாபாரதி சார்பாக அரசு மருத்துவமனைக்கு 33 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள காய்கறி வெட்டும் இயந்திரம் வழங்கப்பட்டது.

விஜயபாரதம்



# களத்தில் தனியாக லூசி களப்புரா


விஜயபாரதம்

கன்னியாஸ்திரி பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட பிஷப் பிராங்கோ முலக்கலை கைது செய்யக் கோரி கன்னியாஸ்திரிகளுடன் போராட்டத்தில் பங்கேற்றதற்காக சகோதரி லூசி கலப்புரா கத்தோலிக்க திருச்சபையில் இருந்து வெளியேற்றப்பட்டார். வாட்டிகனும் அவரது மூன்று முறையீடுகளை விசாரிக்காமலேயே நிராகரித்தது. கடந்த இரண்டு வருடங்களாக அவர் தங்கியுள்ள கான்வென்ட்டில் இருந்து அவரை வெளியேற்ற, உணவு, தண்ணீர் மறுப்பு, சமூக விலக்கல், இணையத் துண்டிப்பு, உயிருக்கு அச்சுறுத்தல், பொய் கதைகளை பரப்புவது என பலசித்திரவதைகளை அனுபவித்து வருகிறார். அவரது வழக்கை எந்த வழக்கறிஞரும் ஏற்று நடத்த முன்வரவில்லை. இது குறித்து அவர் கூறுகையில், ‘இது நீண்ட போராட்டம் என எனக்குத் தெரியும். 17 வயதில் கன்னியாஸ்திரி ஆன நான் 40 வருடங்களாக அதனை தொடர்கிறேன். கடைசிவரை அப்படியே இருப்பேன். உச்ச நீதிமன்றம்வரை சென்று என் வழக்கை நானே வாதாடுவேன்’ என தெரிவித்தார்.

# உடான் திட்டம் புதிய மைல் கல்



விஜயபாரதம்

மத்திய அரசு துவங்கிய உடான் திட்டம், விமான பயணங்கள் சாதாரண மக்களுக்கும் எட்டும் வகையில் அதன் கட்டணங்களை மலிவு விலையில் கிடைக்க வைப்பதற்காக ஒரு அற்புத முயற்சி. பாரதத்தின் விமானச் சந்தையில் ஒரு புதிய அடித்தளத்தை அமைத்த உடான் திட்டத்தின் கீழ், தற்போது 361 வழித்தடங்கள், 59 விமான நிலையங்கள் (ஐந்து ஹெலிபோர்ட் மற்றும் இரண்டு நீர் ஏரோட்ரோம்கள் உட்பட) செயல்பட்டு வருகின்றன. இதுவரை விமான போக்குவரத்தில் இணைக்கப்படாத நாட்டின் பல மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் இதனால் இணைக்கப்பட்டுள்ளன.

அவ்வகையில் இத்திட்டத்தின் கீழ், வடகிழக்கு மாநிலங்களான இம்பால் (மணிப்பூர்) மற்றும் ஷில்லாங் (மேகாலயா) இடையேயான முதல் நேரடி விமானப் போக்குவரத்து துவங்கப்பட்டது. இதற்கான ஏலத்தில் இண்டிகோ விமானம் தேர்வாகியது. இதனால் இம்பால் ஷில்லாங் இடையே 60 நிமிடங்களில் பயணிக்க முடியும். சாலை வழியே இது 12 மணி நேர பயணம். அழகான மலைகளால் சூழப்பட்ட ஷில்லாங் பல புகழ்பெற்ற கல்வி நிறுவனங்களை கொண்டுள்ளது. மேகாலயாவின் நுழைவாயிலாகவும், சிறந்த சுற்றுலாத் தலமாகவும் திகழ்கிறது.

# மற்றொரு லவ் ஜிஹாத்



விஜயபாரதம்

உத்தரபிரதேசத்தின் பாக்பத்தில் ஒரு ஹிந்து பெண்ணை மணக்க இர்ஷாத் அலி என்ற முஸ்லிம் இளைஞர் தன்னை சோனு என தன் பெயரை மாற்றிக்கொண்டு போலியாக திருமணம் செய்துள்ளார். அவரது குடும்பத்தினர் 7 பேர் அவரை கூட்டு பாலியல் பலாத்காரம் செய்தனர். அவரை மதம் மாற்றி கட்டாயப்படுத்தி மாட்டிறைச்சியை உண்ணவைத்தனர். அவர் இதற்கு அடிபணியாதபோது பலத்கார வீடியோவை வெளியிடுவதாக மிரட்டியுள்ளனர். தப்பிவந்த அந்த பெண் காவல்துறையில் புகார் அளீத்ததன் பேரில் இர்ஷாத், அய்யூப், பில்லு, மெஹபூப், நௌஷத், ஜிந்தா, சமீர், சோமின் ஆகியோர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரிக்கப்ப்ட்டு வருகிறது.



விஜயபாரதம்

# மியான்மர் சோகம்

ராணுவ ஆட்சியில், மியான்மரில் தற்போது 6 கோடிக்கும் குறைவான மக்களுக்குதான் கொரோனா தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன. தரமற்ற மருத்துவ வசதிகள் கொண்டுள்ளதால் கொரோனாவின் அடுத்த அலையை சமாளிக்க முடியுமா என்பது சந்தேகமே. சர்வதேச சமூகத்திடம் இருந்து மக்களுக்கு தரப்படும் உதவிகள் அனைத்தையும் ராணுவம் தன் சுயநலத்திற்கு பயன்படுத்திக்கொள்கிறது. கடந்த ஏப்ரலில் 100 நாட்களில் அரசியல் பிரச்சனைக்கு தீர்வு எட்டப்படும் என உறுதியளித்த ராணுவம், இதுவரை அதற்கு முயற்சிக்கவே இல்லை. வறுமை, மனித உரிமை மீறல்கள் தொடர்கின்றன. ராணுவ ஆட்சியாளர்கள் இதுவரை 945 பேரைக் கொன்றுள்ளனர், 7,026 க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர். 5,474 பேர் தடுப்புக் காவலில் உள்ளனர். 2 லட்சத்து 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறுபான்மையினர் இடம்பெயர்ந்துள்ளனர். 98 பத்திரிகையாளர்கள், 48 எழுத்தாளர்கள் சிறையில் உள்ளனர்' என அங்குள்ள சமூக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

# சௌதி கொண்டாடும் யோகா



விஜயபாரதம்

சௌதி அரேபியாவில் யோகாவை ஊக்குவிப்பதற்கான பல்வேறு வழிகளைப் பற்றி விவாதிக்க கடந்த ஆகஸ்ட் 1ல் பாரதத்தை சேர்ந்த இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகம், யோகாசன விளையாட்டு கூட்டமைப்பு அதிகாரிகளுடன் சௌதி யோகா குழு ஒரு ஆலோசனை கூட்டத்தை நடத்தியது. இதற்காக சௌதி அரேபியாவில் யோகாவை பிரபலப்படுத்த பல ஆண்டுகளாக பணியாற்றி வரும் நூஃப் மர்வாய் தலைமையில் யோகா குழு ஒன்று அமைக்கப்பட்டது. கடந்த 2018ல் பாரத அரசு அவருக்கு பத்மஸ்ரீ விருது வழங்கி சிறப்பித்தது நினைவு கூரத்தக்கது. இது குறித்து கருத்து தெரிவித்த சௌதி விளையாட்டு அமைச்சகத்தின் இயக்குநர் ஜெனரல் அப்துல்லா பைசல், 'சௌதி அரேபியாவில் உள்ள உள்ளூர் சட்டங்களுக்கு ஏற்ப ஒரு யோகா நெறிமுறைகள் இறுதி செய்யப்பட்டது. அவை விரைவில் செயல்படுத்தப்படும்' என தெரிவித்தார்.

# ஏன் எனக்கு மட்டும்



விஜயபாரதம்

நமக்கு சோதனைகள் வந்தால், கஷ்டங்கள் வந்தால், துன்பங்கள் வந்தால் கடவுளிடம் நாம் கேட்பது "ஏன் எனக்கு மட்டும் இப்படி செய்கிறாய்?" இந்த கேள்விக்கு ஒரு டென்னிஸ் வீரர் மிக அழகாக பதில் தந்திருக்கிறார்.

அந்த டென்னிஸ் வீரரின் பெயர் ஆர்தர் ஆஷ். அவர் விம்பிள்டன் வெற்றி பெற்றவர். 1983ல் ஒரு அறுவை சிகிச்சை செய்து கொண்ட பொழுது ரத்தம் பெற்றதால் அவருக்கு எய்ட்ஸ் வந்தது. அவரது ரசிகர்கள் வருந்தினர். பலரும் அவருக்கு எழுதிய கடிதத்தில் கேட்டது: ‘உங்களுக்கு கடவுள் ஏன் இப்படி செய்கிறார்?’

இதை அடிப்படையாகக் கொண்டு அவர் செய்தித்தாளில் ஒரு கட்டுரை எழுதினார். அந்த கட்டுரையின் தலைப்பு: ஏன் எனக்கு மட்டும்?

உலகில் எத்தனையோ மனிதர்கள் இருக்கும்பொழுது ஏன் எனக்கு மட்டும் எய்ட்ஸ் தந்தாய்? குடி, சிகரெட், பெண்கள் தொடர்பு உள்ளவர்கள் எத்தனையோ பேர் இருக்கும் பொழுது அந்த பழக்கம் இல்லாத எனக்கு, ஏன் எனக்கு மட்டும் எய்ட்ஸ் தந்தாய்? இப்படியாக நீண்டு கொண்டே போனது அந்த கட்டுரை.

அதன் முடிவில் இதனது தொடர்ச்சி அடுத்த வாரம் என்றார்.

அடுத்த வாரம் பாகம்2 வெளிவந்தது.

அதில் அவர், உலகில் 500 லட்சம் பேர் டென்னிஸ் விளையாடத் துவங்குகிறார்கள். அதில் 50 லட்சம் பேர் டென்னிஸ் கற்கின்றனர். அதில் 5 லட்சம் பேர் தொழில்முறை டென்னிஸ்க்கு வருகிறார்கள். அதில் 50,000 பேர்தான் சர்க்யூட் லெவல் டென்னிசுக்கும் அதில் 5000 பேர் கிராண்ட்ஸ்லாம் லெவலுக்கு முன்னேறுகிறார்கள்.

அதில் 50 பேர் தான் விம்பிள்டன் விளையாடுகிறார்கள். அதில் 4 பேர் மட்டுமே அரையிறுதிக்குள் நுழைகின்றனர். அதில் 2 பேர்தான் இறுதிப் போட்டிக்கு வருகிறார்கள். அதில் ஒருவர்தான் வெற்றி பெறுகிறார்.

அந்த வெற்றி பெற்ற ஒருவராக, என்னை கடவுள் ஆக்கிய பொழுது நான் கேட்கவில்லை "ஏன் எனக்கு மட்டும்?" என்று. வெற்றி மேல் வெற்றி, பேரும் புகழும் குவிந்தபொழுது நான் கடவுளிடம் கேட்கவில்லை ஏன் எனக்கு மட்டும் என்று. பணம் மழைபோல கொட்டியது. அப்பொழுதும் கேட்கவில்லை

அப்போதெல்லாம் கேட்காத நான் இப்பொழுது கேட்பதற்கு என்ன தகுதி இருக்கிறது? நான் கேட்க மாட்டேன். கடவுள் இது வரை தந்ததை எப்படி மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டேனோ


அது போல இதையும் நான் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்கிறேன்.

இதுவரை எனக்காக வாழ்ந்த நான் இனி பிறருக்காக வாழப் போகிறேன். என்னுடைய பணம், புகழ், செல்வம், மீதமுள்ள வாழ்நாள் அனைத்தையும் இந்த நோய் பற்றி மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தவும், இதற்கான மருந்து தயாரிக்கும் ஆராய்ச்சிகளிலும் நான் செலவு செய்யப்போகிறேன். கடவுள் அனைவரையும் ஆசீர்வதிக்கட்டும் என்று முடித்திருந்தார்.

இன்பம் வந்தபோது ஏனென்று கேட்காத நாம் துன்பம் வரும்போது மட்டும் ஏன் என்று கேட்பது எப்படி சரியாக இருக்க முடியும்? இன்பம், துன்பம் இரண்டையும் அவரே தருகிறார். இரண்டுமே நம் நன்மைக்குத்தான் என்று உணர்வோம். வாழ்வில் மகிழ்ச்சியாக இருப்போம்.

இணையத்தில் இருந்து

# வலையில் சிக்கிய மீம்கள்






இரண்டு புகைப் படத்திலும் உள்ள ஒரு ஒற்றுமை...

ராதா கிருஷ்ணன் சார் தான் !!!


## விஜயபாரதம் தேசிய வார இதழ்

சந்தா செலுத்த / புதுப்பிக்க
**www.vijayabharatham.org**
என்ற இணையதளம் அல்லது
**044 - 26420870** என்ற தொலைபேசி
எண்ணில் தொடர்பு கொள்ளவும் .

93613 99006